ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
| திகதி | 2023.07.31 |

# இலங்கை மத்திய வங்கி அதன் தொடக்க நாணயக்கொள்கை அறிக்கையினை (2023 யூலை) வெளியிடுகின்றது

இலங்கை மத்திய வங்கி அதன் தொடக்க நாணயக்கொள்கை அறிக்கையினை இன்று (2023.07.31) வெளியிட்டது.




[*இடமிருந்து வலமாக: திரு. ஏ ஆர் கே விஜேசேகர, உதவி ஆளுநர், திருமதி. ரி எம் ஜே வை பி பர்னாந்து, மூத்த துணை ஆளுநர், முனைவர். பி நந்தலால் வீரசிங்க, ஆளுநர், திருமதி. கே எம் ஏ என் டவுலகல, துணை ஆளுநர் மற்றும் முனைவர். பி கே ஜி ஹரிஸ்சந்திர, பணிப்பாளர், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்*]

*நாணயக்கொள்கை அறிக்கையின்* வெளியீடானது நாணயக்கொள்கையின் வெளிப்படைத்தன்மையினை மேம்படுத்துவதற்கான முக்கியமானதொரு படிமுறையினைக் குறிப்பதுடன் நாணயக்கொள்கைத் தீர்மானங்களை உருவாக்குவதில் இலங்கை மத்திய வங்கியின் நாணய சபையினால் பரிசீலனையிற்கொள்ளப்பட்ட தகவல்களை வெளிப்படுத்துவதனூடாக அனைத்து ஆர்வலர்களுடனான ஈடுபாட்டினை ஊக்குவிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

நாணயக்கொள்கை அறிக்கையானது உள்நாட்டு மற்றும் உலகளாவிய துறைகள் மீதான தற்போதைய பேரண்டப்பொருளாதார அபிவிருத்திகள் மற்றும் அவற்றின் தோற்றப்பாடு என்பவற்றின் பகுப்பாய்வின் அடிப்படையிலமைந்த பணவீக்கம் மற்றும் ஏனைய முக்கிய பேரண்டப்பொருளாதார மாறிகளின் எதிர்கால போக்கு தொடர்பிலான மத்திய வங்கியின் மதிப்பீட்டினை வழங்குகின்றது. தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்படுகின்ற அபிவிருத்திகள் என்பவற்றினைக் கருத்திற்கொண்டு பணவீக்கம் மற்றும் பொருளாதார வளர்ச்சி என்பன மீதான எறிவுகளிற்கான இடர்நேர்வுகளின் சமநிலை தொடர்பிலான மதிப்பீடொன்றினை வழங்குவதனையும் நாணயக்கொள்கை அறிக்கை நோக்காகக் கொண்டுள்ளது. அத்தகைய மதிப்பீடானது நாணயக்கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்கையில் நாணயச் சபையின் சிந்தனை குறித்து சகல ஆர்வலர்களுக்கும் அதிக தெளிவினையளிப்பதில் இது துணைபுரியும்.

நடுத்தர கால எறிவுகளை இற்றைப்படுத்துகின்ற முக்கிய நாணயக்கொள்கை மீளாய்வுச் சுற்றுகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் ஒவ்வோர் ஆண்டும் சனவரி மற்றும் யூலை ஆகிய மாதங்களில் நாணயக்கொள்கை அறிக்கையினை மத்திய வங்கி வெளியிடும். அவ்வாறு செய்கையில், மத்திய வங்கி சகல ஆர்வலர்களுக்கும் தரவினால் உந்தப்பட்ட மற்றும் முன்னோக்கிய பார்வையிலான தகவல்களைக் காலந்தவறாதவொரு முறையில் வழங்கும். இது மத்திய வங்கியின் நாணயக்கொள்கை உருவாக்கத்தின் வெளிப்படைத்தன்மையினையும் பொறுப்புக்கூறும்தன்மையினையும் மேம்படுத்தும் வேளையில் பொது மக்களின் பணவீக்க எதிர்பார்க்கைகள் நிலைநிறுத்தப்படுவதற்குத் துணைபுரியும்.

நாணயக்கொள்கை மீளாய்வு தொடர்பிலான ஊடக அறிக்கை, ஊடக மாநாட்டு நடவடிக்கைகள் மற்றும் மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ இணையத்தளம் மற்றும் சமூக ஊடகங்களில் இடம்பெறுகின்ற ஏனைய முக்கிய அறிவிப்புக்கள் உள்ளடங்கலாக மத்திய வங்கியின் நாணயக்கொள்கைச் செயல்முறை மீதான தற்போதைய தொடர்பூட்டலினை நாணயக்கொள்கை அறிக்கை முழுமையடையச் செய்யும்.

இணையவழி வெளியீடொன்றாகக் காணப்படுகின்ற நாணயக்கொள்கை அறிக்கையானது மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ இணையத்தளமான https://www.cbsl.gov.lk/ta/வெளியீடுகள்/பொருளாதார-மற்றும்-நிதியியல்-அறிக்கை/நாணயக்-கொள்கை-அறிக்கை இல் கிடைக்கக்கூடியதாகவிருக்கும்.